திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆஸ்பத்திரி இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதல்ல, வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆகையினால் தயவுசெய்து இப்போதாவது நம்முடைய அரசு—அங்கே எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டேன்; இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள்; அதுதான் இல்லை என்று சொன்னாலும் அங்கு கூடுதலாக படுக்கை வசதிகளை விஸ்தரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அதை 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்ற செயற் குறிப்பு அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கிறது. கூடியவிரைவில் அரசினுடைய நிதி நிலைக்கு ஏற்ப அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன் வரும்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த படுக்கை வசதிகள் எப்போது விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பளிச்சென்று விளங்குகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்குப் போதுமான நிலம் இல்லை. அந்த நில வசதியை அவர்கள் ஆர்ஜிதம் செய்து கொடுத்த பின்னர் அதை விரிவு படுத்துவதற்கு படிப்படியாக அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : உங்களுடைய " ration " முடிந்துபோய்விட்டது. (சிரிப்பு).

மருந்தாளுநர்கள்

* 8870—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் கூடுதலாக மருந்தாளுநர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1990 மே 12]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

புதிய பணியிடங்கள் ஏற்படுத்த தடை உள்ளதால் இக்கேள்விக்கிடமில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நியமனங்களுக்குத் தடை உள்ளதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். என்ன தடை அதற்கு இருக்கிறது என்பதை விளக்குவதோடு, வெளியிலே இருந்து வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கைக்கு உரிய முறையில் மருந்தாளுநர்கள் இல்லாத காரணத்தினால் அங்கே வரக்கூடிய நோயாளிகள் வைத்தியரைப் பார்த்த பின்பு அந்த மருந்துகளைப் பெறுவதற்காக இன்றைக்கு மணிக்கணக்கிலே கியூவிலே காத்து இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே அதைக் கவனத்திலே கொண்டு, அப்படிப்பட்ட தடை இருக்குமானால் அந்தத் தடையை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த மருந்தாளுநர்களை தேவையான அளவு நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தடையாணை வேலைப் பளுவின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டது தானே தவிர வேலைப் பளு கூடுகிறபோது அங்கே அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அங்கே தற்போது 8 மருந்தாளுநர்களும், ஒரு முதன்மை மருந்தாளுநரும், ஒரு மருந்துக் கிடங்கு காப்பாளரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும் மருந்தாளுநர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் அங்கே இருந்து வந்து இருக்கிறது. அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அங்கே வருகிற நோயாளிகளுக்கும், அங்கே இருக்கிற மருந்தாளுநர்களின் எண்ணிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என்று மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களே இதுபற்றி விரிவாக அரசுக்கு தன்னுடைய விவரங்களை எழுதி, புதிய மருந்தாளுநர்கள் அதாவது 7 மருந்தாளுநர்களும், 2 தலைமை மருந்தாளுநர்

களும் தேவைப்படுகிறது என்று சொல்லி, மருத்துவப் பணி இயக்குநர் அவர்களுக்கு கடந்த 23-3-1990-லே கடிதம் எழுதி இருக்கிறார்கள். அரசு அவைகளைக் கவனத்தில் கொண்டு மாவட்ட மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தி னாலேயும், ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிற ஒரு இடமாக இருக்கின்ற காரணத்தினாலேயும் அரசு அதற்கு உரிய சில முன்னுரிமை கொடுத்து, நிதியை ஏற்பாடு செய்து, அவர்களை உடனடியாக நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மருந்தாளுநர்கள் கூடுதலாக நியமிப்பதற்கு இன்றைக்கு அரசினுடைய கூடுதல் செலவு, உடனடிச் செலவாக 1.9 இலட்சமும், இறுதிச் செலவாக 2.9 இலட்சமும் ஆகும். ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குச் செலவாகும். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக எண்ணிக்கையை உயர்த்த அரசு பரிசீலனை செய்யும்.

அண்ணா நினைவாலயம்

* 10003—திரு. டி. கே. பழனிசாமி

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, அண்ணா நினைவாலயத்தைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் காலணிகளை வெளியில் கழற்றிவிட்டு செல்ல வேண்டி இருப்பதால், கடுமையான வெயில் காரணமாக அவர்கள் இன்னல்படுவதைத் தவிர்க்க அங்கு தரைவிரிப்பு வசதி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அண்ணா நினைவர்லயத்தில் தரை விரிப்பு வசதி செய்யப்படுமானால், நினைவாலயத் தரைப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த கருப்பு சலவைக்கல் மற்றும் சாகாபாத் கல் ஆகியவற்றின் தோற்றத்தைப் பொது மக்கள் கண்டுகளிக்க இயலாது. மேலும் அண்ணா நினைவாலயத்தில் பொதுமக்கள் நடைபாதைப் பகுதியில் நிழல் தரக் கூடிய கொடிப்பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வெயிலின் கொடுமை குறைகிறது. எனவே அங்கு தரை விரிப்பு அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.